**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**

# O.S. 60/2024

**(Old OS.No. 117/2020)**

**Examination of - PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | ரங்கசாமி |
| **Father Name** | : | ஆறுமுகம் |
| **Village** | : | வேட்டவலம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.11.2025.**

## முதல் விசாரணை

நான் தற்போது வேட்டவலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இவ்வழக்கின் வாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி எனது வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்து அதனை உறுதிபடுத்தும் வகையில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

16.10.1986ம் தேதியில் ராதா அம்மாள் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட அசல் கிரயபத்திரம் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** ஆக குறயீடு செய்யப்படுகிறது. 03.11.2017 தேதியிட்ட வாதி பெயரில் கதிர்வேலு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி 03.11.2017ம் தேதியிட்ட உயில் பத்திரம் பிரிவு 68 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் உயிலின் சாட்சியத்தின் வாயிலாக மட்டும் தான் குறயீடு செய்யவேண்டும் என்று ஆட்சேபணை செய்துள்ளார், எனவே மேற்படி உயிலினை இந்நீதிமன்றம் அனுமதித்து குறியீடு செய்யவில்லை.

16.02.2020 தேதியிட்ட கதர்வேலு அவர்களின் இறப்பு சான்றின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2** ஆகும். 16.07.2020 தேதியிட்ட வாதி தாவா சொத்திற்கு செலுத்திய சொத்துவரி ரசீது தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 16.07.2020 தேதியிட்ட வாதி தாவா சொத்திற்கு செலுத்திய குடிநீர் வரி ரசீது தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். வாதி தாவா வீட்டிற்கு செலுத்திய மின கட்டணத்திற்கான மின் இணைப்பு அட்டை தாக்கல் செய்தகிகறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும். சுந்தரமூர்த்தி, ஹரிதாஸ் பெயரில் எழுதிவைத்துள்ள தானசெட்டில் மென்ட் பத்திர்தின் 18.06.2020 தேதியிட்ட பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும்.

ஹரிதாஸ், விஜயகுமார் பெயரில் எழுதிவைத்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் 20.06.2020 தேதியிட்ட பதிவு நகல் தாக்கல் செய்கிகேறன் அது **வா.சா.ஆ.7** ஆகும். பிரதிவாதி பெயரில் விஜயகுமார் எழுதிவைத்துள்ள 25.06.2020 தேதியிட்ட கியைப்பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8** ஆகும். பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய 11.08.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.9** ஆகும். பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய 02.09.2020 தேதியிட்ட பதில் அறிவிப்பின் நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

(குறுக்குவிசாரணை செய்யவேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– M.C. Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்